# 1 பூனையைக் கண்டறிதல்!

0124CH01



## நாம் பாடுவோம்

பார்க்கிறேன்,பார்க்கிறேன், பார்க்கிறேன், அடர்த்தியான உரோமங்கள் கொண்ட என்னுடைய பூனையைப் பார்க்கிறேன்



நீ சாளரக்



நீ என்னுடைய படுக்கைக்குக்கீழ் தூங்கிக் கொண்டிருக்கிறாயா? நீ எங்கு இருக்கிறாய் என்னுடைய பூனையே?




பார்க்கிறேன், பார்க்கிறேன், பார்க்கிறேன் என்னுடைய அடர்த்தியான உரோமங்கள் கொண்ட பூனையே! நீ என்னுடைய முதுகுப்பையினுள் இருக்கிறாயா?





நீ என்னுடைய சிகப்பு நிற அடுக்குக்கு வெளியே இருக்கிறாயா? என்னுடைய அடர்த்தியான உரோமங்கள் கொண்ட பூனையே நீ எங்கு இருக்கிறாய்??



வா, வா, வா அடர்த்தியான உரோமங்கள் கொண்ட பூனையே என்னிடத்தில் வா! நீ என்னுடைய ஜாடியின் அடிப்பகுதியைத் சொறிந்துக் கொண்டிருப்பதைப் பார்த்துவிட்டேன். நீ என்னுடைய கார்மீது ஏறி விளையாடிக் கொண்டிருப்பதைப் பார்த்துவிட்டேன். என்னுடைய அடர்த்தியான உரோமம் கொண்ட பூனையே என்னிடத்தில் வா!







நீ தொப்பிக்கு மேலே தாவிக்கொண்டிருப்பதைப் பார்த்துவிட்டேன். வா, வா, வா என்னுடைய அடர்த்தியான உரோமம் கொண்ட பூனையே என்னிடத்தில் வா

நீ என்னுடைய படுக்கைக்குக் கீழ் பதுங்கிக் கொண்டிருப்பதைப் பார்த்துவிட்டேன். என்னுடைய அடர்த்தியான உரோமம் கொண்ட பூனையே இங்கே வா

இந்த பாடலைச் சத்தமாக வாசியுங்கள், உங்களைப் பின் தொடர்ந்து குழந்தைகளைக் கூறச் சொல்லுங்கள். குழந்தைகளிடம் படத்தைக் காட்டி பூனை எங்கு, எதன்மீது, எதன் கீழ், எதன் மேலே, எதன் கீழே இருக்கிறது என்பதை வகுப்பில் விவாதிக்க வையுங்கள். அவர்களைச் சுற்றி அவர்கள் தினம்தோறும் பார்க்கும் விலங்குகளான நாய், பசு, பூனை முதலியவை குறித்துப் பேசுவதற்கு ஊக்கப்படுத்துங்கள்.



© NCERT not to be republished

## பாடலில் இருக்கும் படத்தைப் பார்த்து சரியான வார்த்தைகளை வட்டமிடுக.

அ. சிவப்பு வண்ணப் பந்து படுக்கை மேல்/ படுக்கை கீழ்/ படுக்கை மீது இருக்கிறது..

ஆ. பூனை காருக்கு உள்ளே/ காருக்கு வெளியே/ கார்மீது இருக்கிறது.

இ. ஆண் மரத்துக்கு அடியில் படுத்திருக்கிறான்/ உள்ளே படுத்திருக்கிறான்/ மீது படுத்திருக்கிறான்

ஈ. பசுமாடு வீட்டுக்குள் இருக்கிறது/ வீட்டின் மேல் இருக்கிறது/வீட்டுக்கு வெளியே இருக்கிறது. .

## சிந்தித்துப் பதிலளியுங்கள்

அ. உன்னுடைய காலணியை எங்கு வைத்தாய்? அறையின் உள்ளே/ அறையின் வெளியே.

ஆ. உன்னுடைய குப்பைகளை நீ எங்கு எறிந்தாய்? குப்பைத் தொட்டியின் உள்ளே/ வெளியே.

## பொருட்களைக் கண்டுபிடித்து விளையாடுவோம்

வகுப்பறைக்கு வெளியில் மற்றும்-9 மரத்துக்கு அடியில் இருக்கும்.

குழந்தைகளை இரண்டு குழுவாகப் பிரித்துக்கொள்ளுங்கள். ஒரு குழு வெள்ளை சுண்ணாம்பு கட்டி(சாக்பீஸ்), சிவப்பு பந்து, மற்றப் பொருட்களைக் கொடுத்து ஒளித்து வைக்கும்படி, கூறிவிட்டு மற்றொரு குழுவை அவற்றைக் கண்டுபிடிக்கும்படி கூறுங்கள். அப்போது குழந்தைகள் அந்த பொருள் இருக்கும் இடங்களை உள்ளே/ வெளியே, தொலைவில்/ அருகில், மேல்/ கீழ் போன்று பேசிப் பழகுவார்கள்.

### சான்றாக:



- கண்டுபிடிப்பதற்காக ஒளித்து வைக்கப்பட்டிருக்கும் சுண்ணாம்புக் கட்டியை(சாக்பீஸ்) பலகைக்கு அருகில் அல்லது மேசைக்கு அடியில் இருக்கவேண்டும்.
- சிவப்புப் பொருளைப் பார்க்கும்போது அது

© NCERT not to be republished


## பந்தை எறிந்து விளையாடுவோம்!


ஒவ்வொரு குழந்தையும் பந்தைக் கூடைக்குள் எடுத்துப் போடவேண்டும். பந்து கூடைக்குள் விழும்போது மற்ற குழந்தைகள் 'உள்ளே' என கூறவேண்டும். பந்து கூடையிலிருந்து வெளியே வரும்போது அவர்கள் 'வெளியே' என கூறவேண்டும்.



## நாம் செய்வோம்

A. உள்ளே இருக்கும் பொருட்களைத் தெரிவு செய்க.





எந்த வேறுபாடுகளும் இல்லாமல் அனைத்துக் குழந்தைகளும் பங்கேற்கும் வகையில் செயல்பாடுகள் அமையவேண்டும். சான்றாக, ஒரு சலங்கையை ஒரு பந்துடன் இணைக்க வேண்டும். பந்து கூடையின் உள்ளே அல்லது வெளியே இருக்கும் போது குறிப்பிட்ட ஒலியைப் பெறுவதற்காகக் கூடையின் மேற்பரப்பை வெளியில் இருந்து வேறுபட்டதாக மாற்றலாம்.



© NCERT not to be republished

B. வெளியில் இருக்கும் பொருட்களைத் தெரிவு செய்க.





C. கொடுக்கப்பட்டிருக்கும் படத்தைப் பார்த்து சரியான சொல்லைத் தெரிவு செய்க..

i. ஒரு பையன் மரத்தின் மேல்/ அடியில் அமர்ந்துள்ளான்.

ii. பறவை மரத்தின் மேல்/ அடியில் அமர்ந்துள்ளது.



D சிரிப்பை மூக்குக்குக் கீழ் வரைக மற்றும் கண் இமைகளை கண்களுக்கு மேல் வரைக.



© NCERT not to be republished

E. நமது தேசியக் கொடியைப் பார். அதில் எத்தனை நிறங்கள் உள்ளன?

சரியானவற்றைத் தெரிவு செய்க.

i. தேசியக்கொடியின் மேல் பகுதியில் எந்த நிறம் உள்ளது? வெள்ளை/ இளஞ்சிவப்பு/பச்சை.

ii. தேசியக் கொடியின் கீழ் பகுதியில் எந்த நிறம் உள்ளது? பின்க்/ இளம்சிவப்பு/ பச்சை.

iii. தேசியக் கொடியின் பச்சை நிறத்திற்கு மேல் எந்த நிறம் உள்ளது? வெள்ளை/ இளம்சிவப்பு/ மஞ்சள்.

iv. அசோகச் சக்கரம் தேசியக்கொடியின் எந்தப் பகுதியில் அமைந்திருக்கிறது? ஓரத்தில்/ நடுப்பகுதியில்/ மூலையில்



தேசியக்கொடி எங்கு எப்போது ஏன் ஏற்றப்படுகிறது என்பதைக் குறித்து குழந்தைகளுடன் விவாதியுங்கள். குழந்தைகளை தேசிய விழாக்கள் பற்றிய உணர்வுகளை வெளிப்படுத்தவிடுங்கள். குழந்தைகளிடம் ஒரு தேசியக் கொடியைச் செய்யவையுங்கள். அவர்களை தேசியக்கொடி முன்பு எழுந்து நிற்க வைத்து தேசிய கீதம் பாட வையுங்கள்.

© NCERT not to be republished

## சிக்புக் சிக்புக் நம்முடைய தொடர்வண்டி செல்கிறது.



சிக்புக் சிக்புக் சிக்புக் என
நம்முடைய தொடர்வண்டிச் செல்கிறது.
மலைக்கு மேலும்
கீழே சமவெளிகளிலும்
சிக்புக் சிக்புக் சிக்புக் என
நம்முடைய தொடர்வண்டி செல்கிறது.
என்னுடைய போகிக்கு முன்பும் போகி
என்னுடை போகிக்கு பின்பும் போகியும்
(தொடர்வண்டி சக்கரம்) இணைந்து
ஒரு சங்கிலி போன்றுள்ளது.
ஆறுகளுக்கு மேலாகவும்
மழைகள் வழியாகவும்
சிக்புக் சிக்புக் சிக்புக் சிக்புக் என
நம்முடைய தொடர்வண்டி செல்கிறது.

அ. தொடர்வண்டியின் இயந்திரத்திற்குப் பின்பாக எத்தனை போகிகள் உள்ளன?

ஆ. சிவப்பு போகிக்கு முன்பாக எத்தனை போகிகள் உள்ளன?

இ. சிவப்பு நிற போகிக்கு அடுத்து உள்ள போகிகளுக்கு ஆரஞ்சு நிற வண்ணம் தீட்டுக..

ஈ. சிவப்பு நிற போகிக்கு முன்பு இருக்கும் போகிகளுக்கு நீல நிற வண்ணம் தீட்டுக..

குழந்தைகளிடம் அவர்களுடைய தொடர்வண்டி பயண அனுபவம் குறித்துக் கேளுங்கள். தொடர்வண்டியில் பயணம் செய்திருக்காத குழந்தைகளிடம் பயணம் குறித்துக் கேள்வி கேளுங்கள். தொடர்வண்டி என்றால் என்ன என்பதை அவர்களுக்குள் விவாதிக்க வையுங்கள். பயன்படுத்தப்பட்ட அட்டைபெட்டிகள் மற்றும் காகிதங்களைப் பயன்படுத்தி அவர்களைத் தொடர்வண்டி செய்ய வையுங்கள்.



© NCERT not to be republished

# நாம் விளையடுவோம்

குழந்தைகள் பாட்டு பாடி விளையாடும் போது குழந்தைகள் அனைவரையும் ஒருவருடைய தோள்பட்டையை மற்றவர் பிடித்து, தொடர்வண்டி போன்று நிற்க வையுங்கள். இப்போது தொடர்வண்டியிலிருக்கும் குழந்தைகள் அனைவரும் தனக்கு முன்பு யார் நிற்கிறார் பின்பு யார் நிற்கிறார் என கூறவேண்டும்.




சுவாலியும் ரோஹித்தும் சில பொருட்களைக் குழுவாகச் சேர்ந்து உருவாக்கிக் கொண்டுள்ளனர்.




குழந்தைகளை இதுபோன்ற செயல்களைச் செய்ய வையுங்கள். குழந்தைகளிடம் விதைகள், இலைகள், மணிகளைக் கொடுத்து அவை ஒவ்வொன்றையும் தனித்தனியாகப் பிரித்து வைக்கச் செய்யுங்கள்.






© NCERT not to be republished



## நாம் செய்வோம்

சுவாலி எல்லா பொத்தான்களையும் மூன்று குழுவாகப் பிரித்திருக்கிறாள்.



சுவாலி ஏன் இத்தகைய குழுக்களை உருவாக்கினாள்?

வேறு வழிகளில் இந்தப் பொத்தான்களை எப்படி பிரிப்பது என்பதனை படமாக வரைந்து சுவாலிக்கு உதவுங்கள்.

© NCERT not to be republished



### திட்டப்பணி

குழந்தைகளை வகுப்பறையிலிருக்கும் அலமாரியை அடுக்கச் சொல்லுங்கள். குழந்தைகள் பொருள்களை அலமாரியில் வைக்கும்போது அவர்களிம் இடம், நிலை சார்ந்த சொற்களைக் கூறி அந்த இடத்தில் பொருட்களை வைக்கும்படி கூறுங்கள். சான்றாக, இரண்டு பொருள்களை அலமாரியின் கீழ் அடுக்கில் வையுங்கள், ஒரு பொருளை அலமாரியின் மேல் அடுக்கில் வையுங்கள்.